International Journal of Linguistics and Computational Applications (IJLCA) ISSN 2394-6385 (Print)
Volume 3, Issue 1, January – March 2016 ISSN 2394-6393 (Online)

# நல்லம்மப் பாட்டு: வரலாற்று - நிலவியல் கோட்பாட்டை முன்னிறுத்தி

வே. இரவி[#1], முனைவர். பெ. கோவிந்தசாமி[*2]
[1]ஆய்வாளர் (பகுதி நேரம்), நாடகத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
[2]உதவிப் பேராசிரியர், மீள் உரிமைப் பணி

நாட்டார் வழக்காறுகள் தொடக்கத்தில் சேகரிப் புக்கு உரியனவாக மட்டுமே விளங்கின. பின்னர், பண்பாடு மானிடவியலின் பிரிவாக மாறியது. அதன் வளர்ச்சியாக நாட்டார் வழக்காறுகளை மையப்படுத்தி 'நாட்டார் வழக் காற்றியல்' என்ற தனி அறிவுத்துறை உருவாயிற்று. இதன் பலனாக நாட்டார் வழக்காறுகள் ஆய்வுப்பொருளாக மாறின.

ஓர் அறிவுத்துறையானது தனித்துவமான தன்மை களுடன் விளங்கினாலும் பிற அறிவுத்துறைகளுடன் அதை இணைத்து ஆராயும் 'பல்துறைச் சங்கம் ஆய்வு' என்ற பெயரிலான ஆய்வுமுறை இன்று செல்வாக்குப் பெற்றுள்ளது. நாட்டுப்புற மக்களிடையே வாய்மொழியாகப் பல்வேறு இலக்கியங்கள் வழக்கில் உள்ளன. அவை வாய்மொழியாகப் பரவும் போது காலம், நிலம், பண்பாடு, மொழி இவற்றின் மூலம் பல்வேறு மாற்றங்களை அடைகின்றன. அவற்றை ஆராய்வதால் அவை வழங்கப்படும் பகுதியின் சமுதாயப் பண்பாட்டு நிலைகளைத் தெரிந்து கொள்ள இயலும்.

ஜேக்கப் கிரிம் (1785-1863) எனும் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த மொழியியலறிஞர் 'Deutsche Mythologie| எனும் நூலை 1835 ஆம் ஆண்டு வெளியிட்டது முதல் அறிவியல் பூர்வமான நாட்டார் வழக்காறுகள் பற்றிய ஆய்வு தொடங்கியது.மொழியியல்,உளவியல்,மானிடவியல், இலக்கி யம், வரலாறு போன்ற பல்துறை ஆய்வாளர்களின் பங்களிப் பால் நாட்டுப்புற வழக்காறு எனும் துறை இன்று தனித்துறையாக வளர்ச்சிப் பெற்றுள்ளது. அமெரிக்க நாட்டு இந்தியானா பல்கலைக் கழகத்தில் வரலாறு மற்றும் நாட்டுப்புறவியல் பேராசிரியராகப் பணிபுரிந்த பேராசிரியர் ரிச்சர்ட் எம். டோர்சன் ஒப்பீட்டு நாட்டார் வழக்காற்றுக் கொள்கையே வரலாற்று - நிலவியல் கொள்கை என்று குறிப்பிடுகின்றார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய ஆய்வு முறையே வரலாற்று - நிலவியல் ஆய்வு முறை. நாட்டார் வழக்காறுகளை அறிவியல் பூர்வமாக ஆய்ந்த முதல் ஆய்வு முறையும் இதுவாகும். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் வழக்காறு ஒன்றின் பழைய வடிவம் கண்டறியப்பட்டுப் பின்னர் அவ்வடிவம் முதன் முதலில் எங்குத் தோன்றியது? எக்காலத்தில் தோன்றியது? எந்தெந்த நிலப்பகுதி வழியாக எங்கெங்குப் பரவிச் சென்றது? என்ற விவரங்களைக் கண்டறிவது வரலாற்று நிலவியல் கோட்பாட்டு ஆய்வாகும்.

ஆண்ட்டி - ஆர்னி (1867 - 1925) என்னும் பின்லாந்து ஆய்வாளர் இம்முறை உருவாகுவதில் முக்கியப் பங்காற்றினார். பின்லாந்து மற்றும் ஐரோப்பாவில் சேகரிக்கப்பட்ட கதைகளை வகைப்படுத்திக் கதை வகை அடைவை 1911 இல் வெளியிட்டார்.. பின்லாந்தில் தோன்றி வளர்ந்ததால் ஃபின்னிஷ் ஆய்வு முறை என்ற பெயரும் உண்டு.

தியோடர் பென்ஃபே (1809 - 1881) எனும் ஜெர்மானிய இந்தியவியல் அறிஞர் சமஸ்கிருத கதை இலக்கியங்களை ஆராய்ந்தார். பஞ்ச தந்திரக் கதை களை ஜெர்மானியில் மொழி பெயர்த்தார். இம்மொழி பெயர்ப்புக்கான முன்னுரையில் சமஸ்கிருத - ஐரோப்பியக் கதைகளுக்கிடையேயுள்ள ஒற்றுமைகளைப் பற்றி எடுத்துரைத்துள்ளார். மக்களின் பண்பாட்டு வரலாற்று தொடர்புகளால் மற்றும் அவர்களிடையே உண்டான கடன் வாங்குதலால் ஏற்பட்டது என்கிறார்.

வரலாற்று - நிலவியல் ஆய்வு முறையின்படி ஒரு நாட்டுப்புறக்கதை நூறு மாற்று வடிவங்களில் காணப்படலாம். ஆனால், அவையனைத்தும் ஒரு காலத்தில் ஓரிடத்தில் ஒருவனால் படைக்கப்பட்ட ஒரு கதையிலிருந்து தோன்றிய தாகலாம், பின் அக்கதை தான் தோன்றிய இடத்தினின்றும் பல இடங்களுக்கும் பரவிச் சென்ற போது அவ்விடங் களுக்கேற்ப மாற்றமடைந்திருக்கலாம், சில வேளைகளில் அவை எழுதப்பட்டும் அச்சிடப்பட்டும் இருந்தாலும் நிலவெல்லை கடந்து அவை பரவிச்செல்லும் போது மாற்றம் நிகழும்.

வரலாற்று - நிலவியல் ஆய்வு முறையில் பல்வேறு நிறைகள் உள்ளன. அவையாவன, ஒரு நாட்டார் வழக் காற்றின் பல்வேறு வடிவங்களை முறையாக ஆராயாமல் மனம்போன போக்கில் பொதுக்கருத்துக்களைக் கூறுவதை விடுத்து முறையாக ஆராய இந்த ஆய்வு முறை உதவுகிறது.

ஒரு வழக்காற்றின் பழைய வடிவம், அது தோன்றிய இடம், பரவிய வழிகள், பெற்ற மாற்றங்கள், போன்ற விவரங்களை ஊகிக்க இந்த ஆய்வுமுறை உதவுகிறது.

இந்த ஆய்வு முறையால் அறியப்படும் ஓர் வழக்காறு தோன்றிய இடம், பரவிய வழிகள், மக்கள் நாடுகடந்து பரவிய அல்லது இடம் விட்டு இடம் பெயர்ந்த வரலாற்றையும் மக்கள் சமூகங்களிடையே காணப்பட்ட தொடர்புகளையும் அறிய துணை செய்யும்.

வரலாற்று - நிலவியல் ஆய்வு வழக்கொழிந்து பழம்பொருளாகிவிடாமல் இன்றும் தப்பி இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் அது கொள்கையாக இல்லாமல் ஓர் ஆய்வுமுறையாக இருப்பதாகும்.

## தமிழில் வரலாற்று - நிலவியல் ஆய்வு முறை

தமிழில் வரலாற்று - நிலவியல் ஆய்வுமுறையில் பேராசிரியர் முனைவர். வி.ஐ. சுப்பிரமணியம் அவர்களின் 'பஞ்சதந்திரமும் சிலப்பதிகாரமும்' எனும் கட்டுரை குறிப்பிடத்தக்கது. பலமொழிகளில் வழங்கிவரும் கீரிக்கதையின் செய்திகளை ஒத்து நோக்கி எந்தக்கூறு முன்னது என்று தெளிவதை முதல் நோக்கமாகவும், பஞ்சதந்திர ஸ்லோகம் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டிருப்பதால் அதன்காலம் பஞ்சதந்திரத்தின் பின் தான்' என்று எஸ். வையாபுரிபிள்ளை வாதிப்பது தக்கதா என்பதை ஆராய்வது இரண்டாவது நோக்கமாகக் கொண்டது இக்கட்டுரை.

பேராசிரியர் தே.லூர்து அவர்கள் 'வாய் மொழி இலக்கியத்தின் இயல்புகளும் சில சிக்கல்களும்' எனும் கட்டுரையில் 'ஆக்காட்டிப்பறவை' பற்றிய பாடல் வடிவங்களை ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். ஆறு. இராமநாதன் அவர்கள் நீட்டூரி கதை' மற்றும் சின்னண்ணன் சின்னசாமி கதைப்பாடல்' ஆகிய இரண்டு கதைப்பாடல்களைக் குறித்து வரலாற்று - நிலவியல் ஆய்வு நிகழ்த்தியுள்ளார்.

நல்லம்ம பாட்டு: வரலாற்று - நிலவியல் கோட்பாட்டை முன்னிறுத்தி" எனும் தலைப்பில் இக்கட்டுரை அமைகின்றது. இந்த ஆய்வுமுறையைப் பொறுத்தவரை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் கதை முழுமையாகச் சேகரிக்கப்பட்டால் தான் ஆய்வு முடிவு ஓரளவு சரியானதாக அமையும். இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட கதை

முழுமையாகச் சேகரிக்க இயலவில்லை. எனவே, இந்த ஆய்வுரையில் கூறப்படும் முடிவுகள் மேலாய்வு செய்வதற்கு உரியவையாகும்.

## நல்லம்மப் பாட்டு - வரலாற்று நிலவியல் ஆய்வு

### ஆய்வுக்குரிய கதைப் பாடல்

நல்லம்ம பாடல் என்பது கேரளாவில் நிகழ்த்தப்படும் கண்ணகி பற்றிய ஒரு சடங்குசார் கலையாகும். இது நேர்த்திக்கடனுக்காகப் பாடப்படும் நாட்டார் கலை வடிவமாகும். பெரும்பான்மையாகப் பாலக்காடு மாவட்டத்திலும், திருச்சூர், மலப்புரம் மாவட்டங்களில் சிறுபான்மையாகவும் நிகழ்த்தப்படும் நிகழ்கலை வடிவமாகும். இது பகவதிக் காவுகளிலும், கொடுங்கல்லூர் செல்லும் வெளிச்சப்பாடுகளின் வீடுகளிலும் நிகழ்த்தப்படுகின்றது. கொடுங்கல்லூர் உட்பட கேரளத்திலுள்ள பல பகவதி கோயில்களும் கண்ணகி கோயில்களாக இருந்து உருமாறியவையே. இத்தகைய காவுகளில் நடத்தப்படுகின்ற நிகழ்த்துக்கலைகள் கண்ணகி பற்றியனவாக அமைந்துள்ளன.

கண்ணகி பற்றிய கதைகள் கேரளத்திலுள்ள பகவதி காவுகள், சீர்மக்காவுகள், பத்ரகாளி காவுகள், குறும்பக் காவுகள் எனும் பெண் தெய்வ வழிபாட்டிடங்களில் பெரும்பாலும் நிகழ்த்தப்படுகின்றன. நல்லம்ம பாட்டு, பகவதி பாட்டு, தோற்றம் பாட்டு, நந்துணிப் பாட்டு, வேலன் பாட்டு என்று பல பெயர்களில் வழங்கப்படுகிறது. வாய் மொழியாகவே பாடப்பட்டு வருகிறது. இப்பாடலை வண்ணார் இனத்தவர் மட்டுமே பாடி வருகின்றனர். இச்சாதியில் பெருவண்ணான், மண்ணான் போன்ற உட்பிரிவுகள் உள்ளன. அவர்களும் ஒரு சில இடங்களில் பாடி வருகின்றனர். மலையாள மாதம் விருச்சிகம் முதல் மீனம் வரை நிகழ்த்தப்படுகிறது (நவம்பர் முதல் மே மாதம் வரை).

சிலப்பதிகாரக் கதையின் மாற்று வடிவ மாக இருப்பினும் கதைகளில் கோவலன், கண்ணகி பெயர்கள் பொன்மகன், நல்லம்ம என்று கூறப்படுகின்றன. மாதவி என்ற முக்கிய கதாபாத்திரம் இக்கதைப்பாடல்களில் குறிப்பிடப்படுவதில்லை.

### கதைத்தலைப்பு

நல்லம்ம பாட்டு, பகவதி பாட்டு, நந்துணி பாட்டு, வண்ணான் பாட்டு, ஆவியர் பாட்டு, வேலன் பாட்டு, தோற்றம் பாட்டு என்று பல பெயர்களில் வழங்கப்படுகிறது. பெரும்பாலான கதை வடிவங்களிலும் கண்ணகியை 'நல்லம்ம' என்றே அழைக்கின்றனர். நல்லம்ம, பொன்மகன் இவர்கள் இருவரின் தாயாரையும் நல்லம்ம என்றே அழைக்கின்றனர். ஆகவே ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட 'நல்லம்ம பாட்டின் பெயர் கதையில் வரும் நல்லம்ம எனும் கதாபாத்திரங்களின் பெயரில் வழங்கப்படுகின்றது. பாலக்காடு மாவட்டத்தில் சித்தூர், ஆலத்தூர், பாலக்காடு போன்ற வட்டங்களில் நல்லம்ம பாட்டு' என்றழைக்கப்படுகின்றன.

கேரளத்தில் பெரும்பாலான காவுகள் பகவதி காவுகள் என்றே அழைக்கப்படுகின்றது. பகவதி காவுகளில் பகவதியைக் குறித்துப் பாடப்படுவதால் 'பகவதி பாட்டு' என்றழைக்கப்படுகின்றது. கொடுங்கல்லூர் பகவதியின் மறுவடிவமான பகவதி காவுகளில் இக்கதைப் பாடல் நிகழ்த்தப்படுகின்றது.

இக்கதைப்பாடலில் வாத்தியக் கருவியாக நந்து ணியும், குழித்தாளமும் பயன்படுத்தப்படுகின்றது. நந்து ணியைப் பயன்படுத்தி இக்கதைப்பாடல் நிகழ்த்தப்படுவதால் 'நந்துணிப் பாட்டு' என்றும் அழைக்கப்படுகின்றது. பாலக்காடு மாவட்டத்தில் ஆலத்தூர், சித்தூர் வட்டங்களில் நந்து ணியை மீட்டிப் பாடும் வழக்கம் இல்லை. பாட்டின் இடையே நிகழும் முக்கியமான சடங்கான பொன்மகனைக் கொன்று தோற்றும் (உயிர்ப்பித்தல்) சடங்கிற்கு மட்டுமே நந்து ணியைப் பயன்படுத்துகின்றனர். இப்பாடலைப் பாடுகையில், திருச்சூர், மலப்புரம் மாவட்டங்களில் நந்துணியை மீட்டுகின்றனர்.

இக்கதைப்பாடலைப் பாடுபவர்கள் வண்ணான், வேலன், பெருவண்ணான் போன்ற சாதியைச் சார்ந்தவர்கள் ஆவர். எனவே, வண்ணான் சமூகத்தினர் பாடுவதால் 'வண்ணான் பாட்டு' என்றும், வேலன் சமூகத்தினர் பாடு வதால் வேலன் பாட்டு என்றழைக்கப்படுகின்றது. இவர்களில் வண்ணான் சமூகத்தினர் பாலக்காடு மாவட்டத்திலும், வேலன் சமூகத்தினர் திருச்சூர் மாவட்டத்திலும் வாழ்ந்து வருகின்றார்கள்.

### இதழ்கள், நூல்கள் மூலம் சேகரித்தவை:

தமிழில் முனைவர். சா. சிவமணி எழுதிய 'கண்ணகி கதைகள்' எனும் நூலில் நல்லம்ம பாட்டைக் குறித்து கூறியுள்ளார். பொன்மகளின் திருமண நிகழ்ச்சி யினைக் குறித்த செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். மலையாள மொழியில் வெளிவந்த சில நூல்களில் காணப்படும் கட்டுரைகளில் சில பாடல் வரிகள் இடம் பெற்றுள்ளன. நாடன் பாட்டுகள்-தொகுதி இரண்டில் பாலக்காடு மாவட்டத்தில் ஆலத்தூர் வட்டத்தில் பாடப்படும் பகவதிப்பாட்டில் (கிருஷ்ணதாஸ். திருப்பாளூர் -2011) வரும் சில பகுதிகள் மட்டும் உள்ளன. வாய்மொழிப் பாடலா தலால் இதழ்கள் மற்றும் நூல்களில் வெளிவரவில்லை.

### களப்பணி மூலம் சேகரித்தவை:

இவ்வாய்வுக்கான களப்பணி, பாடல் நிகழ்த்த பெறும் இடத்தை முன்வைத்து இருநிலைகளில் கூறலாம். முதலாவதாக, பிரசித்திப் பெற்ற கோயில்களில் நிகழ்த்தப்படும் பாடல். இரண்டாவதாக, வெளிச்சப்பாடு' என்றழைக்கப்படும் பக்தர்களின் வீடுகளில் உருவாக்கியுள்ள கொடுங்கல்லூர் ஆலயத்தில் நிகழ்த்தப்பெறும் பாடல் நிகழ்ச்சி.

பெண் தெய்வங்களை முக்கிய பிரதிஷ்டை செய்துள்ள கோயில்களில் மட்டுமே நல்லம்மப் பாட்டு நிகழ்த்தப்படுகின்றது. பகவதி காவு, ஸ்ரீ குறும்பக்காவு, சீறும்பக்காவு, கொடுங்கல்லூர் பகவதி காவு போன்ற கோயில்களில் மட்டுமே நல்லம்மப் பாட்டு நிகழ்த்தப்படும். வண்ணான், நாயர், எழுத்தச்சன், வடுகர், மூத்தான், என்று எல்லா சமூகத்தினர்களின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில் களிலும் நல்லம்மப்பாட்டு நிகழ்த்தப்படுகின்றன. பாலக்காடு மாவட்டத்தில் உள்ள முல்லக்கல் ஆலயங்களில் எல்லா வருடமும் நல்லம்மப் பாட்டு நடத்தப்படுகின்றது.

பாலக்காடு மாவட்டத்தில் பெருங்கோட்டுகுறிச்சி' எனும் ஊரிலுள்ள மன்னத்துக்காவு பகவதி ஆலயத்தில் நல்லம்மப் பாட்டும், பானயும் மாற்றி மாற்றி நடத்துவர். அதாவது, ஒரு வருடம் நல்லம்மப் பாட்டு நிகழ்த்தினால், அடுத்த வருடம் பான' எனப்படும் நிகழ்த்துக்கலை நடத்துவர்.

தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதியினர் வணங்கி வந்த அல்லது அவர்களின் உரிமையிலிருந்த காவுகள் பிற்காலத்தில் மேலாதிக்கச் சாதியினரின் கட்டுப்பாட்டிற்குள் வந்த பிறகு வழிபாட்டு முறைகளிலும், சடங்குகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தினர். காவு' என்று முடியும் கோயில்கள் எல்லாமே தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வணங்கி வந்த அவர்களின் உரிமையிலிருந்த கோயில்களாகும். உயர்சாதியினரின் கோயிலாக மாறிட நாயர், மூத்தான் சமூகத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள சில கோவில்களில் இதனைக் காணலாம்.

பாலக்காடு மாவட்டம் கிணாசேரியில் உள்ள சேர்ம்பற்ற பகவதி ஆலயம் நாயர் சாதியினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இவ்வாலயத்தில் முக்கியமான திருவிழாக்களில் வாளும் சிலம்பும் பிரதிஷ்டையாக வைக்கப்படுகின்றது. ஆனால், கொடுங்கல்லூர் கண்ணகி தொடர்பான வேறு சடங்குகள் ஒன்றும் காணப்படுவது இல்லை. பாலக்காடு மாவட்டம் குன்னும்புரத்திலுள்ள ஸ்ரீ குரும்பா பகவதி ஷேத்ரம் நாயர் சமூகத்தினரின் பராமரிப்பில் உள்ளது. ஸ்ரீகுரும்பா என்ற பெயருள்ள பெரும்பாலான கோயில்களும் கண்ணகி கோயில்களாகும் அல்லது கண்ணகி கோயில்களாக இருந்து உருமாறியவையே ஆகும்.

கேரளாவிலேயே கண்ணகி பெயருள்ள கோயில்கள் இரண்டு மட்டுமே உள்ளன. இவை, பாலக்காடு மாவட்டத்தில் நகரிலுள்ள கடைவீதியில் உள்ளன. இவை யிரண்டும் மூத்தான் சமுதாயத்தினரின் பராமரிப்பில் உள்ள ஆலயங்களாகும். ஆனால், கொடுங் கல்லூர் கண்ணகி ஆலயத்தின் பெரும்பாலான சடங்குகளும் இவ்வால யங்களில் காணப்படுவதில்லை என்பது கவனத்திற் குரியதாகும். கண்ணகி அம்மன் கோயிலில் வருடந்தோரும் ஆராட்டு எனும் திருவிழா நடைபெறும். அதன் முன்னோடியாக பெரும்பாலான கொடுங்கல்லூர் கண்ணகி கோவில்களில் நடைபெறும் கதிர் கூடு கொண்டு வரும் சடங்கு இந்தக் கோயிலிலும் நடைபெறுகின்றது. தாழ்த் தப்பட்ட இனத்தவரான ‘செறுமர்’ இனத்து மக்கள் இந்த கதிர்க்கூடு கொண்டு வருவர். தாழ்த்தப்பட்ட இனத்து மக்களுக்குத்தான் கதிர்க்கூடு கொண்டு வருவதற்கான உரிமை உள்ளது. இந்தச் சடங்கைக் காண்கையில் கண்ணகியம்மன் கோயிலில் பெரும்பாலான கண்ணகி கோயில்களில் நடைபெறும் சடங்குகள் போல முன்பு நடந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

உயர் சாதியினரின் கட்டுப்பாட்டில் கோயில் மாறு கையில் சடங்குகளும் மாறியிருக்கலாம். மேலும், இது போன்ற கோயில்களில் பூசைகள் செய்பவர்கள் பிற்படுத்தப்பட்டவராக இருந்தனர். இப்போது உயர்சாதி யினர்களான நம்பூதிரிகள் மற்றும் பிராமணர்கள் பூசை செய்கின்றார்கள். இவர்கள் பூசை செய்யக் காரணம், பெரும்பாலான கோயில்களில் சோதிடம் (பிரஷ்ணம்) பார்த்த போது உயர்சாதியினர் பூசை செய்யலாம் அல்லது செய்ய வேண்டும் என்று கூறப்பட்டதால் அவர்கள் பூசை செய்யத்தொடங்கினர். பக்தர்களின் கூட்டம் அதிகரிக்கும் கோயில்களில் உயர்சாதியினரின் ஆதிக்கம் தலைத் தூக்கியது எனலாம். அவ்வாறு மாற்றப்பட்ட கோயில்களில் எல்லாம் அதர்ம முறையிலான சடங்குகள் (பஞ்ச மகாரச் சடங்குகள்) நீக்கப்பட்டன.

கோயில்களிலும், வெளிச்சப்பாடுகளின் வீடுகளில் உள்ள கோயில்களிலும் நடத்தப்படும் நல்லம்மப் பாட்டு பாடப்படும் கால எல்லை பொருளாதாரத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. ஒரு நேரப்பாட்டானது குறைந்த கால எல்லையாகவும், நாற்பத்தோரு நாட்கள் கூடிய கால எல்லையாகவும் உள்ளது. ஒரு நேரப்பாட்டு நடத்துவதற்குப் ஐந்தாயிரம் ரூபாய் முதல் பத்தாயிரம் ரூபாய் வரை செலவாகும். வளிச்சப்பாடுகளின் வீடுகளில் நடத்தப்படும் நல்லம்மப் பாட்டானது பெரும்பாலும் ஒரு நேரப்பாட்டாகவே அமைகின்றது. இவ்வாறாக நல்லம்ம பாடல் நிகழ்த்தப்படும் வீடுகளில் கொடுங்கல்லூர் பகவதிக்குக் கோயில் எழுப்பியிருப்பர். மீன பரணி என்றழைக்கப்படும் மிகப்பிரபலமான கொடுங்கல்லூர் கோயில் திருவிழாவிற்குச் செல்லும் முன்பு அவர்களின் வீடுகளில் நல்லம்ம பாட்டை நிகழ்த்துவர். அவர்களின் வீட்டில் தென்னை ஓலைகளால் அலங்கரித்திருப்பர். இவர்களுக்குத் தெரிந்த வெளிச்சப்பாடுகளையும் அழைப்பர். வீட்டில் ஒலிப்பெருக்கி வைத்தும், சுவரொட்டி வைத்தும் நல்லம்ம பாட்டு நடப்பதை அறிவிப்பர். பாடல் நிகழ்த்த வரும் கலைஞர்களுக்கும், காணவரும் பக்தர்களுக்கும் உணவளிப்பர். பெரும்பாலான வீடுகளிலும் கோழிக்கறி உணவுடன் பரிமாறுவர். அனைவரையும் மகிழ்ச்சிப்படுத்த மதுவும் அளிப்பர்.

நல்லம்ம பாட்டு வண்ணான் இனத்தவரே கூடுதலாகப் பாடுகின்றனர். அவர்கள் இதற்கான காரணத் தைக் கூறுகையில் கண்ணகியாம் நல்லம்ம இவர்களுக்கு நாவில் எழுதிக்கொடுத்ததாகக் கூறுகின்றனர். வண்ணான் இனத்தவர் பாடுகையில் அதைக் கேட்டு மற்ற இனத்தவர் பாட இயலாது. இவர்கள் நிகழ்ச்சிகளில் பாடுகையில் வேகமாகவும், பக்க வாத்யக் கருவிகளின் சத்தங்கள் மூலம் தெளிவாகக் கேட்க இயலாது. மற்ற சமூகத்தினர் பாடக்கற்றுக் கொண்டால் தங்கள் இனத்த வர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று நினைக் கின்றனர். நல்லம்மப் பாட்டை வேறு யாருக்கும் சொல்லக்கூடாது, எழுதியும் கொடுக்கக் கூடாது என்று பாடகர்கள் கூறுவதற்கு இதுவும் ஒரு காரண மாக இருக்கலாம்.

கேரளாவில், திருச்சூர் மாவட்டத்தில் திருவில் வாமல’ என்னுமிடத்திலுள்ள இராமகிருஷ்ணன் எனும் பாடகரிடம் இது பற்றிக் கேட்டுக்கொண்டிருந்த போது, அவரின் மனைவியார் ஒரு சம்பவத்தைக் கூறினார். அவர்கள் ஊரில் ’மாணிக்கன்’ என்பவரின் மகன் ’இராஜேஷ்’ என்பவர் இப்பாடலை ஒருவருக்குச் சில வரிகள் பாடிக்கொடுத்தாராம்; அடுத்த நாள் அவருக்கு வாய்ப்பேச முடியாமலாகி விட்டதாம். எனவே, காரணங்கள் பலவாறாக இருப்பினும் குலவித்தை கல்லாமலே கிடைக்கும் என்பதற்கேற்ப வண்ணான் சமுதாயத்தினர் மட்டுமே நல்லம்ம பாடலைப் பாடி வருகின்றனர்.

மேற்கூறிய காரணங்களால் இப்பாடலைச் சேகரிக்கும் முயற்சி மிகக் கடினமுடையதாக இருந்தது. பல்வேறு சடங்குகளும் நிகழ்த்துதல்களும் இணைந்தவொரு நாட்டார் வளமைச் சடங்கு நிகழ்த்தலாக நல்லம்மப் பாட்டு உள்ளது. கண்ணகி கதை பல்வேறு பெயர்களுடனும் மாற்றுக் கதைவடிவத்தோடும் கேரள நாட்டாரி டையே இருந்து வருகின்றது.

## பயன்படுத்தப்பட்ட நூல்கள்

[1] இராமநாதன். ஆறு., - வரலாற்று- நிலவியல் ஆய்வியல் முறை அறிமுகமும் ஆய்வுகளும்
[2] தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு 1988